# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*
கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*


# EDITORIAL BOARD


Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in



**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# தமிழ்

# *Human Morals Tangible in the Quran*

***A.Shameela Begum*** *(Ref.No.:7883/Ph.D.K8/Tamil/P.T./April 2017/Confirm./Dt:10.06.2019) Research Scholar (Part Time), Department of Tamil, Rajah Serfoji Government Arts College (Autonomous), Thanjavur-613 005, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University)ORCiD: https://orcid.org/0009-0007-6278-6570*

***Dr.G.Chandran, Research Advisor*** — *Associate Professor, Department of Tamil, Rajah Serfoji Government Arts College (Autonomous), Thanjavur-613 005, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University)ORCiD: https://orcid.org/0009-0004-1064-3963*

***Abstract***

*Islam is one of the most specific religions in the world. It has its own individual history. It may be formed by the efforts and experience of the Prophet Muhammad. Other religions have worshipped God other than Buddhism. Religions that are worshiping one God are also found all over the world. Among them, the Islam religion is deeply followed the belief in one God. Muslims who lived in any country they have their own method of worship and life to themselves. It seems that the names like Muslim and Islam were appeared and given a just before and after the period of the Prophet Muhammad. Also it can be seen even the names putting to people are assumed same.*

***Keywords***: *Islam and morality, morality, exaltation of morality, use of morality.*

## திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்

**அ.ஷமீலா பேகம்** *(Ref.No.:7883/Ph.D.K8/Tamil/P.T./April 2017/Confirm./Dt:10.06.2019), முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழ்த்துறை, மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர் -613 005, தமிழ்நாடு, இந்தியா (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) ORCiD: https://orcid.org/0009-0007-6278-6570*

**முனைவர் கு.சந்திரன்,** *ஆய்வு நெறியாளர் - இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ்த்துறை, மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர் -613 005, தமிழ்நாடு, இந்தியா (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)*

**ஆய்வுச்சுருக்கம்**

உலகிலுள்ள குறிப்பிடத்தக்க மதங்களுள் இஸ்லாமும் ஒன்றாகும். இதற்கென்று தனி வரலாறு உண்டு. முகமது நபியின் முயற்சியாலும் அவர் பெற்ற அனுபவத்தாலும் உருவாயிற்று

எனலாம். பௌத்தம் தவிரப் பிறமதங்கள் கடவுள் வழிபாடு உடையவை. ஓர் இறையை வணங்கும் மதங்களும் உலகெங்கும் காணப்படுகின்றன. இவற்றுள் 'ஓர் இறை' என்ற நம்பிக்கையை ஆழமாகக் கொண்டு பின்பற்றி வரும் சமயம் (மதம்) இஸ்லாம் ஆகும். எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தங்களுக்கென்று வழிபாட்டு முறையையும் வாழ்க்கை முறையையும் கொண்டவர்கள் இஸ்லாமியர்கள். முஸ்லிம், இஸ்லாம் என்ற பெயர்கள் நபிகள்நாயகம் காலத்திற்குச் சற்று முன்னும் பின்னும் தோன்றி வழங்கியதாகத் தெரிகிறது. மக்களுக்கு இடும் பெயர்கள்கூட ஒரே பாவனையில் இருத்தலையும் காணமுடிகிறது.

**திறவுச்சொற்கள்:** இஸ்லாமும் ஒழுக்கமும், ஒழுக்கம், ஒழுக்கத்தின் உயர்வு, ஒழுக்கத்தின் பயன்.

**முன்னுரை**

மன்னராட்சிக் காலத்தில் இறைத் தொண்டர்களுக்கும் அந்தக் காலத்தில் வாழ்ந்த மன்னர்களுக்கும் பகைமை உணர்வும், மன்னன் இறைத் தொண்டர்களை மதிக்காமையும், இறைத் தொண்டர்கள் இறைவன் அருளால் வலியுறுத்தி நிலை நின்றதையும் வரலாற்றில் காணமுடிகிறது. காலப் போக்கில் இந்நிலை மாறி, இந்தியாவில் இஸ்லாம் மன்னர் பலர் இந்துப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டனர். அப்படி மணம் செய்யப்பட்ட இந்துப் பெண்கள் இந்து முறைப்படியே அங்கு வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இந்த வரலாற்று நிகழ்வு, 'இந்திய முஸ்லீம் தலைவர்கள்: விடுதலைப் போராட்டமும் அதற்கு அப்பாலும்' என்ற நூலில் ராஜ்மோகன் காந்தி பின்வருமாறு எழுதுகிறார்.

> "அக்பரின் இந்து மனைவி பெற்றுக் கொடுத்த மைந்தன் — அக்பருக்கு வாரிசாக வந்த ஜகாங்கீர்; அதுபோன்றே ஜகாங்கீரின் இந்து மனைவிதான் பேரரசரின் ஷாஜகானின் அன்னை. சீரிய முஸ்லிம் பற்றாளர் என்று அழைக்கப்படுகிற (மற்றவர்களுக்கு மதவெறியர்) ஔரங்கசீப் திருமணம் புரிந்து கொண்டது இந்து உயர்குலப் பெண்ணையே! கடைசி மாமன்னர் பகதூர்ஷா-2 (கி.பி1837-1857)வைப் பெற்றெடுத்தவள் ஓர் இந்துப் பெண்மணி. பெயர் லால்பாய்! இந்துப் பெண்கள் அனைவருமே இஸ்லாத்துக்கு மாற்றப்பட்டார்கள் உண்மையே. ஆனால் இவர்கள் அனைவருமே இந்து கலாச்சாரத்தைச் செங்கோட்டைக்குள் எடுத்துச் செல்லவும் செய்திருக்கிறார்கள். இதே கலாச்சாரம் இன்னொரு வழியிலும் வேகம் கொண்டு பாய்ந்து சென்றது. ஆம் இந்துக்கள் முஸ்லிம்களின் ஆடை வகைகளை அணியத் தொடங்கினார்கள் . . . . மேலும் இந்துக்களில் இருபாலினத்தினரும் — முஸ்லிம் சூஃபிகளின் கல்லறைக்குச் சென்று வேண்டிக் கொள்வதுண்டு." (நஸீமுத்தீன், ப.31)

என்ற விளக்கம் இந்து-இஸ்லாம் ஒற்றுமையாக வாழ மன்னர்களே வழிகோலிய வரலாற்றை நஸீமுத்தீன் சுட்டிக்காட்டி உணர்த்துகிறார். இதுபோலவே ஆட்சி அதிகாரத்திலும் பேசும் மொழியிலும் இருபாலர்க்கும் சமூகம் சார்ந்த ஒற்றுமைகளும் இருந்தன. எனினும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சில சிறப்பான ஒழுக்கங்களை இஸ்லாமியர்களுக்குக் குர்ஆன் போதிக்கின்றது. அது எல்லா மக்களுக்கும் உயிரினங்களுக்கும் பொதுவாய்த் தோன்றினும் அல்லாஹ்வின் பெயரால் சொல்லப்பட்டமையின் இஸ்லாமியர்களுக்கென்று தொழுகை முதலாயின வரையறுக்கப்பட்டன. இந்நிலையில் குர்ஆன் கூறும் பொது ஒழுக்கங்களில் ஒருசில ஒழுக்கங்கள் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது. இந்த அடிப்படையில் இவ்வொழுக்கங்கள் சமுதாயத்தினர்க்குக் குறுகிய அளவில் பிரித்துக் கூறப்படுகின்றன.

1.1. ஒழுக்கம் — விளக்கம்
1.2. இஸ்லாமும் ஒழுக்கமும்
1.3. ஒழுக்கத்தின் பயன்
1.4. ஒழுக்கத்தின் உயர்வு
  1.4.1. தூய எண்ணம்
  1.4.2. கல்வி
  1.4.3. நன்றியுணர்வு
  1.4.4. உண்மை (பேசல்)

### 1.1. ஒழுக்கம் - விளக்கம்

"ஒழுக்கம்" என்பது ஒழுகுதல், பழுகுதல், வாழ்தல், ஒரு குறிப்பிட்ட முறையைப் பின்பற்றுதல் போன்ற பொருண்மையில் ஆளப்படும் ஒரு சொல்லாக இருக்கிறது. இது அறம் சார்ந்ததாகவும் கூறப்படும். திருக்குறள் இதனை அறத்துப்பாலில் வைத்துள்ளது. "ஒழுக்கம்" என்பது "ஒழுக்கமுடைமை" என்ற அதிகாரத்தின்வழி விளக்கப்படுகிறது. பரிமேலழகர்,

> "அஃதாவது, தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினை உடையராதல். இது, மெய்ம் முதலிய அடங்கினார்க்கல்லது முடியாதது ஆகலின் அடக்கமுடைமையின் பின் வைக்கப்பட்து" (ஜெயக்குமார், ப.56)

என்கிறார். ஒவ்வொரு நாட்டினர்க்கும் அங்கு வாழும் பல பிரிவினர்க்கும் தொன்றுதொட்டு வரும் நடைமுறை ஒன்று உண்டென்றும் அதுவே ஒழுக்கமாகக் கருதப்படுகிறதென்று கருத்துப்படப் பரிமேலழகர் இவ்வாறு கூறினார். எவனும் முதலில் தானே நல்ல நடத்தையில் நிலைபெற வேண்டும்; பிறகுதான் பிறருக்கு உபதேசிக்கப் புறப்பட வேண்டும் என்பர் புத்தர். அவர் கூறியவற்றுள் "ஒழுக்கம் என்பது

வரையறுக்கப்பெற்ற சமுதாயச் சட்ட நெறிமுறைகளுக்குட்பட்டு ஒழுகும் முறையாகும்'' என்று மானிட வாழ்வியல் சிந்தனைகள் என்ற பகுதியில் புத்தரின் பொன்மொழி வரிசை எண்:77இல் சுட்டப்பட்டிருக்கிறது (கோபால், ப.71). பொதுவாக, மனிதர்களின் நல்ல நடத்தைமுறையை ஒழுக்கம் என்ற பொதுச் சொல் குறிக்கின்றது. எல்லா மதங்களும் சமயங்களும் ஒழுக்கத்திற்கு முதன்மை தருகின்றன. ஒப்பீட்டு அளவில் இஸ்லாத்தில் இது மிகவும் வற்புறுத்தப்படுவதாக அறியமுடிகிறது. இஸ்லாத்தில் அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்றாக இது பேசப்படுகிறது. ஹெச்.அப்துர் ரகீப் தம் அன்பு நபியின் (ஸல்) அமுத வாக்குகள் தொகுதி-1 என்ற நூலின் பதிப்புரையில்,

"இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடு, சமூகவியல், பொருளியல், அரசியல், ஒழுக்கவியல், அமைப்பியில் எனப் பல்வேறு துறைகள் தொடர்பான நூற்றுக் கணக்கான நபி மொழிகளை . . . . ஆறு தொகுதிகளில் கலாமே நுபுவ்வத் என்ற அறிஞர் தொகுத்துள்ளார்'' (ப.10)

எனக் குறிப்பிடுகிறார். ஆறு தொகுதிகளுள் ஒரு தொகுதி ஒழுக்கவியலாகும். முகமது நபி (ஸல்) ஒழுக்கம் சமூக வளர்ச்சிக்கு மிகத் தேவை என்பதை உணர்ந்திருப்பதை இப்பகுதி காட்டுகிறது. நபிகளின் கூற்று அல்லாஹ் அறுவுறுத்தியதாகத் தெரிகிறது.

### 1.2. இஸ்லாமும் ஒழுக்கமும்

உலகில் மக்களுக்கு ஒழுக்கத்தின் மேன்மையையும் பலனையும் உணர்த்துவதற்காகத்தான் இறைவன் தன்னை அனுப்பியதாக நபிகள் குர்ஆனில் கூறுகிறார். இமாம் மாலிக் முக்தா என்பார் எழுதிய நபிகள் பற்றிய நூல் ஒன்றில் குர்ஆன் தெரிவிக்கும் நபிகளின் கூற்றை அறிவிக்கிறார். அது, "சிறந்த ஒழுக்கங்களையும் நன்மைகளையும் அழகிய நற்செயல்களையும் நிறைவு செய்வதற்காகத்தான் இறைவன் என்னை அனுப்பினான்'' (மேற்கோள்: ஃபாருக் கான், ப.50) என எழுதியுள்ளார். இது மானுடத்துக்கு ஒழுக்கம் தேவையானது; அதிலே மனிதர் ஒவ்வொருவரும் சிறந்து விளங்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. அந்த முறைப்படியே நபிகள் நாயகமும் விளங்கியுள்ளார்.

இஸ்லாத்தில் ஒழுக்கமும் மேன்மைக் குணங்குளும் மிகமுக்கியமானவை என்றும் நபியினுடைய கூரிய சொற்கள் இதனை ஆழமாகப் பதியச் செய்கின்றன என்றும் முஹம்மத் ஃபாருக் கான் தெளிவுப்படுத்துகிறார். அது,

"அண்ணல் நபிகளாரின் மிகப்பெரும் சாதனையே இதுதான். நன்னடத்தையை நிறைவு செய்வதற்காகவே நான் அனுப்பப்பட்டேன் என்கிற நபிமொழியில் மனித வாழ்வு பற்றிய சரியான சிறப்பான விளக்கம் பொதிந்துள்ளது . . . . மனிதனின் தனிப்பட்ட வாழ்விலும் சரி, கூட்டு

வாழ்விலும் சரி அவற்றின் யாதொரு பகுதியும் ஒழுக்கத்துக்கு அப்பாற்பட்டதாக ஒழுக்க நெறிமுறைகளை விட்டுச் சுதந்திரமாக எஞ்சியிருக்கவில்லை" (ஃபாருக் கான், ப.51)

என விளக்கப்பட்டுள்ளது.

சொல்லும் செயலும் தூய்மையாகவே அமைவதைக் குர்ஆன் முகமது வழியாகக் கூறுகிறது. திருக்குறளில் கூறப்படும் "இன்சொல்" (அதிகாரம் 10), "ஒழுக்கமுடைமை" (அதிகாரம் 14) ஆகியவை இதில் அடங்கும்.

"எந்த மனிதனுக்கு அவனுடைய தீயசெயல் அலங்காரமாக்கப் பட்டிருக்கிறதோ மேலும் அதனை அவன் நல்லதென்று கருதிக் கொண்டிருக்கின்றானோ (அந்த மனிதனின் வழி கேட்டிற்கு எல்லையேதும் உண்டா என்ன?) திண்ணமாக அல்லாஹ்தான் நாடுவோரை நெறிபிறழச் செய்கிறான். மேலும் தான் நாடுவோரை நேர்வழியில் செலுத்துகிறான்" (திருக்குர்ஆன், 35:8, பக்.875-876).

என்கிறது குர்ஆன். மேலும், நற்செயல்களைச் செய்வோர் நன்மையையும் தீச்செயல்கள் செய்வோர் தீமையையும் அடைவார் என்றும் குர்ஆனில் சொல்லப்பட்டிருப்பது எண்ணத்தக்கது.

"எவரேனும் கண்ணியத்தை விரும்பினால் - கண்ணியம் முழுவதும் அல்லாஹ்வுக்கே உரியதாகும் (என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும்). அவனை நோக்கி உயர்ந்து செல்வது தூய்மையான சொல் மட்டுமே! இன்னும் நற்செயல் அவனை மேலே உயர்த்துகிறது. மேலும், எவர்கள் தீயசூழ்ச்சிகள் செய்கின்றார்களோ அவர்களுக்குக் கடுமையான வேதனை இருக்கிறது. மேலும் அவர்களுடைய சூழ்ச்சிகள் தானாகவே அழியக் கூடியவையாக இருக்கின்றன" (திருக்குர்ஆன், 35:10, ப.876)

என்பதும் ஒழுக்கம் பற்றிக் குர்ஆன் கூறும் வாசகம் ஆகும். நன்மையும் தீமையும் ஒழுக்கம் சார்ந்தவை. ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் பெரிதாய்ப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை,

*ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்.* (குறள்.131)

என்றார் வள்ளுவர். தீமையை உள்ளத்தாலும் எண்ணக்கூடாது என்பதை இக்குறள் வெளிப்படுத்துகிறது. எண்ணுவது செய்தலோடு ஒக்கும் என்பதைப் பரிமேலழகர் "நினைத்தலும் செய்தலோடு ஒக்கும்" (குறள்.116 உரை விளக்கம், ப.51) என்றார். வள்ளுவத்தின் சிந்தனைகள் குர்ஆனில் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது.

### 1.3. ஒழுக்கத்தின் பயன்

மனிதர்க்கு வாழ்க்கையில் பயன்படும் குணங்களில் முக்கியமானது ஒழுக்கம் என்று கூறலாம். ஒழுக்கம் வாழ்க்கையோடு மிகவும் தொடர்புடையது. தீய ஒழுக்கம் மனிதரை அண்டாதவரை எல்லா நடத்தைகளும் நல்லொழுக்கத்தில் அடங்கியவை. நல்லொழுக்கம் நற்பெயரையும் முன்னேற்றத்தையும் தரக்கூடியது. “நீடித்த ஆயுளும் நிறைவான நல்லொழுக்கத்தையும் உடையவர்கள்தாம் உங்களில் சிறந்தவர்கள்” (ஃபாருக் கான், ப.61) என்று நபிகள் தன்னை வினவியவர்களிடம் கூறியதாகக் குர்ஆன் தெரிவிக்கின்றது. இதனை அஹ்மத் என்ற நூல் குறிப்பதாக எடுத்துக் கூறப்படுகிறது. இதனை மேலும் விளக்கும் இந்நூல்,

> “நீடித்த ஆயுள் கிடைக்கும் போதுதான் நல்லறங்களை அதிகமாகச் செய்வதற்கும், இறைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கும் அவனுக்கு அடிபணிந்து வாழ்வதற்கும் அதிகமான வாய்ப்புக்கள் கிடைக்கும்” (ப.61)

என்கிறது. ஒழுக்கம் மனிதனுக்குத் தரக்கூடிய பயன்களில் முதன்மையானது. எப்போதும் மகிழ்ச்சி வேண்டும் என்று எண்ணுபவர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்று நபிகளின் எண்ணம் உள்ளதென்று இஸ்லாத்தை நன்கறிந்த அறிஞர்கள் கூறுகிறார்கள்.

> “மகிழ்ச்சிக்கு (pleasure) ஒழுக்கத்துடன் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. சரியான ஒழுக்க வழிமுறையை மேற்கொள்கின்ற போது உண்மையான மகிழ்ச்சியும் உவகையும் ஏற்படுகின்றன. இந்த உவகையும் களிப்பும் ஆன்மிக களிப்பேருவகையாக மட்டும் இருப்பதில்லை. அதற்கு மேலாக இதயப் பூர்வமான, உணர்வுபூர்வமான அழகுணர்வு பொங்குகின்ற மகிழ்வாகவும் இனிமை தருகின்ற உவகையாகவும் இருக்கின்றன”(ப.31)

என்கிறார் முஹம்மத் ஃபாருக் கான்.

### 1.4. ஒழுக்கத்தின் உயர்வு

ஒழுக்கத்தின் உயர்வு என்பது ஒழுக்கத்தினால் கிடைக்கும் புகழைக் குறிக்கும். ஒழுக்கம் உள்ளவர்கள் தனிப்பட்ட சுயநல வாழ்க்கை என்பதே அமைவதில்லை. எதையும் அவர்கள் விட்டுக் கொடுப்பார்கள். மானம், அன்பு, சுயமரியாதை போன்ற ஒழுக்கத்தினால் மக்கள் தரும் பரிசாகும். மனிதனை மற்ற உயிர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது இந்த ஒழுக்கம்தான். இதுபற்றி, முஹம்மத் ஃபாருக் கான் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "மனிதனை நாம் சுய அதிகாரமும் சுதந்திரமும் பெற்ற படைப்பாகப் பார்க்கிறோம். சுயமாகத் தீர்மானித்து, தேர்ந்தெடுத்துச் செயல் படுகின்ற சுதந்திரமோ, அதிகாரமோ வழங்கப்படாத படைப்புக்களிடம் நன்னடத்தையோ நல்லொழுக்கமோ எதிர்பார்க்கப் படுவதில்லை. அந்தக் கேள்வியே அங்கு எழுவதில்லை. மனிதனுக்கு இருக்கின்ற அதிகாரம் சுதந்திரம் ஆகியவற்றுடன் அழுத்தமான தொடர்புடையதுதான் ஒழுக்கம். இந்த உலகில், தான் நினைத்ததைச் செய்து முடிக்கின்ற சுதந்திரமும் மனிதனுக்குண்டு. இதனால்தான் அவன் ஓர் ஒழுக்கப் படைப்பாக இருக்கின்றான். மற்ற பொதுவான படைப்புக்களிலிருந்தும் அவனை வேறுபடுத்திக் காட்டுவதும் இதுதான் "(ப.13)

என்பது ஒழுக்கத்தின் உயர்வுக்கு அவர் தரும் விளக்கமாகும்.

> "இந்தப் பேரண்டத்தை எத்தகைய நெறிமுறைகள் இயக்கி வருகின்றனவோ அந்த நெறிமுறைகளோடு இயைந்து போனதாக மனித வாழ்வு ஆகிவிட்டது. இந்த உண்மையைத்தான் திருக்குர்ஆன் பின்வருமாறு அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது"(ப.52)

என்று கூறும் அவர் குர்ஆனிலிருந்து எடுத்துக் காட்டும் தருகிறார். "அவன் ஒவ்வொன்றின் மீதும் ஆற்றலுடையவன்." (திருக்குர்ஆன், 64:1, ப.1125). இவை யாவும் ஒழுக்கத்தின் உயர்வையும் தனிச் சிறப்பையும் காட்டுகின்றது.

**1.4.1. தூய எண்ணம்**

மனிதர்கள் மனத்தில் தூய எண்ணம் கொண்டவர்களாக வாழ்தல் வேண்டும். ஒழுக்கத்திற்கு அடிப்படையாக இது அமைவதாக குர்ஆனில் குறிப்பிடப் படுகின்றது. இஸ்லாத்தை விரும்பும் அனைவரும், இறைவன் எப்படி வாழவேண்டும் என்பதை "நிச்சயமாக என் இறைவன் நேர்மையாக இருக்கிறான்" (திருக்குர்ஆன், 11:55, ப.455) என்று பேசப்படுகிறது. ஹூத் — ஓர் இறைத்தூதர் என்று பொருள்.

> "அதாவது எந்த ஒரு வேலையும் நீதி, நியாயம். விவேகம். சத்தியம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டதாகவோ, எதிரானதாகவோ இருக்க முடியாது. அவன் சத்தியத்துடனும், நலத்துடனும்தான் இந்தப் பேரண்டத்தைப் படைத்திருக்கிறான். நமது எண்ணங்களின்படிச் செயல்படுகிற அதிகாரம் நமக்குத் தரப்பட்டிருக்கிறது. எனில் அதற்குரிய நோக்கமும் சத்தியத்தையும் வாய்மையையும் தவிர வேறு ஒன்றும் இல்லை. மனிதன் அகமும் புறமும் இரண்டுமே செம்மைப் படுத்தப்பட்டு நேரானவையாய் இருக்க வேண்டும்.

ஏனெனில் மனிதனின் வெற்றியே அதில் அடங்கியிருக்கிறது”(ஃபாருக் கான், பக்.9-10)

என்று மேல் குர்ஆன் வாசகத்திற்கு விளக்கம் தரப்படுகிறது. அஃதாவது சத்தியம், உண்மை, வாய்மை போன்ற அருங்குணங்களை அல்லாஹ் இறைத் தூதர்க்கு (நபி) போதித்தனுப்பியிருக்கிறான் என்பது பொருளாகிறது. இதைத்தான் பலரும் குர்ஆனில் வாய்மை அல்லது தூய எண்ணம் சுட்டப்பட்டிருக்கிறது. “திண்ணமாக, வெற்றி பெற்று விட்டான் மனத்தைத் தூய்மைப் படுத்தியவன்; மேலும், தோற்றுவிட்டான் அதனை நசுக்கியவன்!” (திருக்குர்ஆன், அத்.91:9-10, ப.1212) என்று நல்லொழுக்கத்திற்குச் சான்றாக மனத்தூய்மையை குர்ஆன் வலியுறுத்தியுள்ளது. அஷ்ஷம்ஸ் — சூரியன் என்று பொருள்.

### 1.4.2. கல்வி

மதம் சார்ந்த கல்வியோ, பொதுவான கல்வி அறிவோ இல்லாதவர்கள் இறைவனை (அல்லாஹ்) சரியாகப் புரிந்து கொள்ள இயலாது. இறைத்தன்மையை இறைவனின் பண்பை புரிந்து கொள்வதற்குக் கல்வியறிவு வேண்டும் என்று நபிகள் நாயகமும் வற்புறுத்துகிறார். இதே கருத்துக் குர்ஆனிலும் விதந்தோதப் பட்டிருக்கிறது. “உண்மையில் அல்லாஹ்வின் அடியார்களில் ஞானமுடையோர் மட்டுமே அவனுக்கு அஞ்சுகின்றார்கள்” (திருக்குர்ஆன், 35:28, ப.878) என்று கல்வி அறிவுடையோரின் (அறிஞர்களின்) பண்பையும் ஒழுகும் முறையையும் குர்ஆன் குறிப்பிடுகின்றது. முகமது இக்பால் சிறந்த கவிஞர். பலமொழி கற்றவர். அவருடைய மிகுந்த பாராட்டுக்கு உரியனவாகத் தோன்றினார். ஃபாத்திர் — படைப்பவன் என்று பொருள்.

### 1.4.3. நன்றியுணர்வு

நன்றியுணர்வு பற்றித் தமிழ் அறஇலக்கியங்கள் அனைத்தும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பேசும் இயல்புடையன. புலவர்கள் அரசர்களைப் பாராட்டுவதுகூட அவர்கள் செய்யும் நல்லாட்சிக்காக எனவும் கருதலாம். நன்றிமறத்தல், செய்ந்நன்றி மறத்தல் ஆகியன செய்தோர்க்கு தேருவதற்கு வழியே இல்லை என்கிறது புறநானூறு. “. . . ஒருவர் செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லை” (புறம். பா.34:5-6) என்பது அது. “நான் நல்லதைச் செய்யும் போது மகிழ்கிறேன் தீமையைச் செய்துவிட்டால் அதற்காக வருந்துகிறேன்” (Afraham Lincon, p.505) என்கிறார் ஆப்ரஹாம் லிங்கன். (“When I do good I feel good; When I do bad I feel bad. This is my religion” — Afraham

*Lincon).* "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் . . ." என்ற குறள் (138) தொடரும் இதனுடன் ஒப்பிடத்தகும். இத்தகைய நன்றி உணர்வை குர்ஆன்,

> "நீங்கள் நன்றி செலுத்துபவர்களாய் இருந்து இறை நம்பிக்கையின் வழியில் நடப்பீர்களாயின் உங்களை ஏன் அல்லாஹ் தண்டிக்கப் போகின்றான்"
> (திருக்குர்ஆன், 4:147, ப.200)

என்கிறது. இது நபிகளின் சொற்கள் போல் தோன்றினும் அல்லாஹின் சொற்களாகவே வெளிவந்துள்ளன.

### 1.4.4. உண்மை பேசல்

உண்மை என்பது இங்கு மெய்ம்மையைக் கண்டறிவது. குறிப்பாக இறைவனின் உண்மை உணர்வைத் தம் உணர்வாக்கிக் கொண்டு அதற்கேற்ப ஒழுக்கத்தை மேற்கொள்ளலாகும். பொய்மை தவிர்த்துத் தாம் கண்டுணர்ந்ததைப் பேசும் வழக்கத்தை இஸ்லாம் மேற்கொள்ள வேண்டும் என்ற கொள்கை. உண்மையைப் பற்றி நபிகள் பின்வருமாறு விவரிக்கிறார். அவர் உண்மை பேசும் மனிதர்களையும் உண்மைக்கு மாறாகப் பொய்மை பேசும் மனிதர்களையும் இறைவன் எப்படி நடத்துகிறான் என்பதைத் தெளிவாக்குகிறார்.

> "உண்மை நன்மையின் பாதையைக் காட்டுகிறது. மனிதன் உண்மை பேசிக் கொண்டே இருக்கின்றான். இவ்வாறாக அவன் உண்மையாளனாக (சித்திக் ஆக) ஆகிவிடுகின்றான்" (ஃபாருக் கான், ப.215)

என்று புகாரி (6094) நூலில் குறிப்பிட்டிருப்பதை முஹம்மத் ஃபாருக் கான் எடுத்துரைக்கிறார். உண்மையுடன் வாழ்தல் என்ற ஒழுக்கத்தின் தனிச் சிறப்பை குர்ஆன், "அல்பகரா"வில்,

> "தொழுகையை நிலைநாட்டி ஜகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயலாகும். மேலும் வாக்குறுதி அளித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்களும் வறுமை மற்றும் துன்பங்களின் போதும் சத்தியத்தித்திற்கும் அசத்தியத்திற்கும் நடக்கும் போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்களுமே புண்ணியவான்கள் ஆவர். இவர்களே உண்மையாளர்கள். மேலும் இவர்களே இறையச்சம் உடையவர்கள்" (திருக்குர்ஆன், 2:177, ப.128)

எனக் குறிப்பிட்டுள்ளது. அல்பஹதா — மாடு அது காளை, பசு இரண்டையும் இச்சொல் குறிக்கும்.

**முடிவுரை**

உலகிலுள்ள அனைத்தையும் படைத்து அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு வாழ அறிவுரை கூறும் நூலாக — வேதமாகக் குர்ஆன் விளங்குகிறது. இப்படி இஸ்லாம் நம்பிக்கைக் கொண்டுள்ளது. இதற்காக மனிதர்களுக்குச் சில ஒழுக்கங்களையும் கற்பிக்கின்றது. இந்த ஒழுக்கங்கள், மனிதர்களை நல்ல சிந்தனையுடனும் அறிவு வளத்தைப் பெற்று அன்பு கலந்து இரக்க மனப்பான்மையுடனும் வாழ வழி வகுக்கின்றன.

**துணைநூற் பட்டியல்**

ஃபாருக் கான், முஹம்மத். *அன்பு நபியின் (ஸல்) அமுத வாக்குகள் - ஒழுக்கவியல், தொகுதி-1.* சென்னை: IFT (Islamic Foundation Trust), 2015.

அப்துர் ரகீப், ஹெச். “பதிப்புரை”, *அன்பு நபியின் (ஸல்) அமுத வாக்குகள்: ஒழுக்கவியல், தொகுதி-1.* சென்னை: IFT (Islamic Foundation Trust), 2013.

கோபால், சி.பி., *புத்தர் பொன்மொழிகளும் மானிட வாழ்வியல் சிந்தனைகளும்.* கோயம்புத்தூர்: இலட்சுமி பதிப்பகம், முதற்பதிப்பு, 2001.

*திருக்குர்ஆன் — மூலம் — தமிழாக்கம்.* அஹ்மத் பாகவி, A.குத்புத்தீன், ரவூஃப் பாகவி, R. அப்துர் (மொ.ஆ.), சென்னை: இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், 6 ஆம் பதிப்பு, 2010.

துரைசாமிப் பிள்ளை, ஔவை (உ.ஆ.), *புறநானூறு மூலமும் உரையும்.* ப.103. சென்னை: சாரதா பதிப்பகம், 2 ஆம் பதிப்பு, 2017.

நயினார் முகமது, சி., *உமறுப் புலவர்: இந்திய இலக்கியச் சிற்பிகள்.* புதுதில்லி: சாகித்திய அகாதெமி, 2 ஆம் பதிப்பு, 2007.

நஸீமுத்தீன், ஏ.வி.எம். (தமிழில்). *இந்திய முஸ்லிம் தலைவர்கள்: விடுதலைப் போராட்டமும் அதற்கு அப்பாலும்.* சென்னை: கிழக்குப் பதிப்பகம், 2023.

மாணிக்கவாசகன், ஞா. *தொல்காப்பியம் மூலமும் உரையும்.* சென்னை: உமா பதிப்பகம், 2 ஆம் பதிப்பு 2010.

முகமது உவைஸ், ம. & அஜ்மல் கான், பீ.மு., *இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு (தொடக்க காலம், 1100 வரை) தொகுதி-1.* மதுரை:பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், முதற்பதிப்பு, 1986:6.

ராமகிருஷ்ணன், எஸ். (ப.ஆ.), *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்).* சென்னை: க்ரியா, விரிவாக்கித் திருத்திய புதிய பதிப்பு, அக்டோபர் 2018:605.

வீரமணி, கி., *டாக்டர் அம்பேத்கரின் புத்தக் காதலும் புத்தகக் காதலும்,* சென்னை: திராவிடர் கழக வெளியீடு, 2 ஆம் பதிப்பு, 2018:7

ஜெயக்குமார், சி. (ப.ஆ.), *திருக்குறள் மூலமும் உரையும் (பரிமேலழகர் உரை)*. சென்னை: அருணா பப்ளிகேஷன்ஸ், 2020:56, 51,

Afraham Lincon, *Big Quotations: An A to Z Companion*. Noida, U.P., India: Maple Press, n.d.

***References***

Farooq Khan, Muhammad. *Anbu Napiyin (Sal) Amutha Vakkukal — Ozhukkaviyal, Volume 1*. Chennai: IFT (Islamic Foundation Trust), 2015.

Abdur Raheeb, H. "Pathippurai", *Anbu Napiyin (Sal) Amutha Vakkukal — Ozhukkaviyal, Volume 1*. Chennai: IFT (Islamic Foundation Trust), 2013.

Gopal, S.P. *Puddhar Ponmozhikalum Manida Vaazhviyal Sinthanaikalum*. Coimbatore: Lakshmi Pathippagam, 1st Edition, 2001.

*Tirukkurran — Moolam — Tamilakkam*. Ahmed Baqavi, A. Qutbuddin, Rauf Baqavi, R. Abdur (Eds.), Chennai: Islamic Institution Trust, 6th Edition, 2010.

Duraisami Pillai, Avvai (Editor). *Purananooru Moolamum Uraiyum*. p.103, Chennai: Saradha Pathippagam, 2nd Edition, 2017.

Nayinar Mohamad, C. *Umarup Pulavar: Indhiya Ilakkiya Chirpigal*. New Delhi: Sakithya Academy, 2nd Edition, 2007.

Naseemutheen, A.V.M. (In Tamil). *Indhiya Muslim Talaivargal: Viduthalai Porattamum Atharku Appalum*. Chennai: Kilakku Pathippagam, 2023.

Manickavasakan, Gna. *Tolkaappiyam Moolamum Uraiyum*. Chennai: Uma Pathippakam, 2nd Edition, 2010.

Mohamad Uvais, M. & Ajmal Khan, P.Mu. *Islamiya Tamil Ilakkiya Varalaru (Thodakka Kaalam, 1100 varai) Volume - 1*. Madurai: Pathipputhurai, Madurai Kamajar University, 1st Edition, 1986:6.

Ramakrishanan, S. (Editor). *Kriyavin Tarkalat Tamil Akarati (Tamil-Tamil-Ankilam)*. Chennai: Cre-A, Virivaakkith Thiruthiya Pudhiya Pathippu, October 2018:605.

Veeramani, Ki. *Doctor Ambedkarin Budhak Kaadhalum Puddhaagak Kaadhalum*, Chennai: Diravidar Kazhaga Veliyeedu, 2nd Edition, 2018:7.

Jayakumar, Si. (Editor). *Tirukkural Moolamum Uraiyum (Parimelazhagar Urai)*. Chennai: Aruna Publications, 2020:56, 51.

Afraham Lincon. *Big Quotations: An A to Z Companion*. Noida, U.P., India: Maple Press, n.d.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com